தமிழ்மணம் சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்
Tamilmanam International Research Journal of Tamil Studies
An Internationally Peer-Reviewed, Open Access Monthly Journal
*eISSN: 3049-0723 pISSN: 3107-7781*
*Vol. 4 Issue: 03 December 2025*
*DOI: https://doi.org/10.63300/tm040312*

# The contribution of Āvārai (Senna Auriculata) to the lifestyle practices of the Tamil People

**Dr. K. Santhanam*,**
Assistant Professor, Nandha Siddha Medical College, Erode-52.
**Dr. V. C.Srinivasan[1],**
Administrative Officer, Nandha Arts and Science College (Autonomous), Erode.
srivc2345@gmail.com, Orcid Id: https://orcid.org/0009-0008-9926-7982
**Dr. A. Lakshmi Duttai[2],**
Assistant Professor, School of Tamil. Pondicherry University, Puducherry.
Email: lakshmi.duttai@pondiuni.ac.in
**Dr. S. Padma[3],**
Principal, Nandha College of Education, Erode.
Email: padma.haris@gmail.com

**Abstract:**

The role of plants in the traditional lifestyle of the Tamil people is immense. Plants have a deep connection with every phase of life, including health maintenance, dietary methods, preparation of homespun medicine, rituals, customary practices, and environmental protection habits. Among these, the plant known as "Āvārai" (Senna auriculata) holds a direct link to the cultural identity of Tamils and their traditional medical practices.

This study comprehensively analyzes the botanical characteristics of Āvārai, its traditional medicinal applications, its social contributions within rural environments, women-centric medicinal knowledge, its philosophical role in rituals and worship, and its environmental status. The theoretical objectives of this research include documenting vanishing traditional knowledge, understanding the popular beliefs surrounding the Āvārai plant, and re-evaluating its status in contemporary society.

The methodology for this study is based on a naturalistic approach to data collection. Data, including brief interviews, memoirs, and experiential details, were collected from traditional healers (Vaidyas), elderly women, rural herbal experts, and environmental activists. The critical finding of this research emphasizes that Āvārai is not merely a "medicinal herb," but rather a cultural heritage symbol that connects and signifies multiple dimensions of the Tamil way of life.

**Keywords:** *Āvārai (Senna auriculata), Sangam Literature, Siddha Medicine, Social Contribution, Herbal Medicine, Lifestyle Practice.*

**Author Contribution Statement**: NIL.
**Author Acknowledgement**: NIL.
**Author Declaration**: I declare that there is no competing interest in the content and authorship of this scholarly work.

**License**

This work is licensed under a Creative Commons Attribution 4.0 International License.

Tamilmanam

# தமிழர் வாழ்வியல் நடைமுறைகளில் ஆவாரையின் பங்களிப்பு

***முனைவர் க.சந்தானம்,** உதவிப்பேராசிரியர், நந்தா சித்தமருத்துவக் கல்லூரி, ஈரோடு-52.

[1]**முனைவர் வி.சி. சீனிவாசன்,** நிர்வாக அதிகாரி,

நந்தா கலை மற்றும் அறிவியல் கல்லூரி (தன்னாட்சி), ஈரோடு.

[2]**முனைவர் அ. லட்சுமி துத்தாய்**, உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை,

புதுச்சேரி பல்கலைக்கழகம், புதுச்சேரி.

[3]**முனைவர். எஸ். பத்மா**, முதல்வர், நந்தா கல்வியியல் கல்லூரி, ஈரோடு.

**ஆய்வுச் சுருக்கம்**

தமிழர் வாழ்வியல் பாரம்பரியத்தில் தாவரங்களின் பங்கு மிகப்பெரியதாகும். வாழ்வின் ஒவ்வொரு நிலையும் உடல் நலம் பராமரிப்பு, உணவு முறைகள், வீட்டுத் தயாரிப்பு மருத்துவ அறிவு, சடங்குகள் நடைமுறைகள், சூழல் பாதுகாப்பு பழக்கங்கள் என அனைத்திலும் தாவரங்கள் ஆழ்ந்த உறவைப் பெற்றுள்ளன. அவற்றில் “ஆவாரை” எனும் தாவரம், தமிழர் பண்பாட்டு அடையாளத்துடனும், மரபு மருத்துவ நடைமுறைகளுடனும் நேரடியான தொடர்பைப் பெற்றுள்ளது. இந்த ஆய்வு, ஆவாரையின் தாவரவியல் தன்மைகள், மரபுவழி மருத்துவப் பயன்பாடுகள், கிராமியச் சூழலில் அதன் சமூகப் பங்களிப்புகள், பெண்கள் மையப்படுத்திய மருத்துவ அறிவு, சடங்குகள், வழிபாட்டு செயற்பாடுகளில் அதன் சித்தாந்தப் பங்கு, மற்றும் சூழல் சார்ந்த நிலைகள் ஆகியவற்றை ஒருங்கிணைத்து விளக்குகிறது. தொலைந்து வரும் மரபு அறிவைப் பதிவு செய்தல், ஆவாரைச் செடியைப் பற்றி மக்கள் நம்பிக்கைகளைப் புரிந்துகொள்ளுதல், மற்றும் இக்கால சமூகத்தில் அதன் அறிவு நிலையை மறுமதிப்பீடு செய்தல் ஆகியவை ஆய்வின் கோட்பாட்டு நோக்கங்களாகும். இத்தலைப்பின் ஆய்வு, தரவுகளைச் சேகரிக்கும் இயற்கை நிலை அணுகுமுறையை அடிப்படையாகக் கொண்டது. பாரம்பரிய வைத்தியர்கள், வயதான பெண்கள், கிராமியப் பகுதி மூலிகை நிபுணர்கள், மற்றும் சுற்றுச்சூழல் ஆர்வலர்கள் ஆகியோரிடம் சுருக்கமான உரையாடல்கள், நினைவுக் குறிப்புகள், அனுபவ விவரங்கள் ஆகியவை பெறப்பட்டுள்ளன. இந்த ஆய்வின் முக்கியமான முடிவு என்னவெனில், ஆவாரை ஒரு “மருத்துவ மூலிகை” மட்டுமல்ல அது தமிழர் வாழ்வியலின் பல பரிமாணங்களை இணைக்கும் ஒரு பண்பாட்டு மரபு அறிவுக் குறியீடு என்பதைக் எடுத்துக் கூறுகிறது.

**முக்கியச் சொற்கள் :** ஆவாரை, சங்க இலக்கியம், சித்த மருத்துவம், சமூக பங்களிப்பு, மூலிகை மருத்துவம், வாழ்வியல் நடைமுறை

## 1. முன்னுரை

தமிழர் வாழ்வியல் முறையில் தாவரங்கள், மலர்கள், மரங்கள் அனைத்தும் தனித்துவமான இடம் பெற்றுள்ளன அவற்றில் ஆவாரைச் செடி ஒரு முக்கிய மூலிகை ஆகும். இது கிராமிய மருத்துவம், குடும்ப பராமரிப்பு, சூழல் பாதுகாப்பு, பண்பாட்டு வழிபாடு போன்ற பல தளங்களில் ஆழ்ந்த பங்களிப்பை வழங்குகிறது. ஆவாரை இலை, பூ, வேர்ப்பகுதி ஆகியவை உடல் நலம் மேம்படுத்தும் வகையில் பரம்பரையாகப் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. பெண்கள் மருத்துவ அறிவியல், குழந்தைகள் பராமரிப்பு, உணவுப் பயன்பாடு ஆகிய துறைகளில் இதன் முக்கியத்துவம் அதிகமாக காணப்படுகிறது. கோயில் வழிபாடு மற்றும் கிராமிய விழாக்களில் ஆவாரையின் ஆன்மீக பங்கு தெளிவாக அறியமுடிகிறது. மேலும், விவசாயத்தில் மண்ணின் ஈரப்பதம் மற்றும் நிலத்தை சீரமைக்கும் வகையில் இதன் பயன்பாடு அதிகரிக்கிறது. இந்த ஆய்வு வரலாற்று அடிப்படையிலான மரபு அறிவு, வாய்மொழி, நூல் ஆதாரங்கள் மற்றும் நேரடி பாரம்பரிய நிபுணர்களின் அனுபவங்களை ஒருங்கிணைத்து, ஆவாரையின் பன்முகப் பங்களிப்பை தமிழர் வாழ்வியலில் ஆராய்கிறது. பரம்பரையாக பரவிய இந்த மூலிகை அறிவை நவீன சூழலில் மீண்டும் சீரமைத்து பாதுகாக்க வேண்டிய அவசியத்தை வெளிப்படுத்துகிறது.




**Fig1: அகத்தி (Sesbania grandiflora) மரத்தின் முக்கியத்துவத்தை விளக்குகிறது**

இந்த படம் **அகத்தி** (Sesbania grandiflora) மரத்தின் முக்கியத்துவத்தை விளக்குகிறது. இது விவசாயம், மருத்துவம், பாரம்பரிய வைத்தியம், ஆன்மீகம், சமுதாயப் பயன்பாடுகள் மற்றும் தொழில்நுட்பப் பகிர்தல்

என பல துறைகளில் அதன் பங்கைச் சுற்றியுள்ள படங்களின் மூலம் அதன் பல்நோக்கு நன்மைகளைச் சித்தரிக்கிறது.

### 1.1. சங்க இலக்கியத்தில் ஆவாரை :

ஆவாரை பற்றிய சங்கால இலக்கியங்களில் நேரடியான குறிப்புகள் காணமுடிகிறது. இதில் ஆவாரை, ஆவிரம், ஆவாரம் எனப் பல பெயர்களில் வழங்கப்பட்டுள்ளதை காணமுடிகிறது சங்ககாலப் பெண்களின் அலங்காரத்தில் ஆவாரைமலர் முக்கியமானதாகப் பயன்படுத்தப்பட்டுள்ளன.

இதனை சங்க இலக்கியத்தில் குறிஞ்சிப்பாட்டில் 'விரிமலர் ஆவிரை' என விரிந்த ஆவிரை மலரை குறிப்பிடுகிறது, தங்கத்திற்கு நிகரான வண்ணம் கொண்டது ஆவிரை என குறுந்தொகையில் 'பொன்தேர் ஆவிரைப் புதுமலர்' குறிப்பிடுகிறது.

**'பொலமலர் ஆவிரை' 'அடர்பொன் அவிர் எய்க்கும் ஆவிரங் கண்ணி', அணி அலங்கு ஆவிரை' எனும் கலித்தொகை பாடல் வரிகள் பொன் போன்ற மலர், அழகான மலர் என குறிப்பிடுகிறது.**

'களரி ஆவிரைக்கிளர் பூங் கோதை' என அகநானூறு பாடல் வரிகள் மூலம் காட்டில் வளரும் பூ எனவும், நடனமாடும் பெண்கள் அணிந்த ஆவிரை மாலை எனவும் குறிப்பிடுகின்றது.

'அணிப்பூனை ஆவிரை எருக்கொடு பிணிந்து' எனவும், அணி அலங்கு ஆவிரைப் பூவோடு எருக்கின்' எனவும், அடர்பொன் அவிர் எய்க்கும் ஆவிரங் கண்ணி' எனும் கலித்தொகை பாடல் வரிகள் தன்னுடைய காதலை ஊர்மக்;களுக்கு தெரிவிக்க தலைவன் குதிரை பொம்மை செய்து அதன் வலம்வரும் பழக்கம் 'மடலேறுதல்' எனக் குறிப்பிடப்படுகின்றது. இந்நிகழ்வில் தலைவன் ஆவிரை மலர்களை அணிந்து வரும் செய்தியை குறிப்பிடுகின்றன.

இதனை குறுந்தொகையில் தலைவன் மடலேறி வரும் பொம்மைக் குதிரைக்கு அணிந்த ஆவிரை மாலை பற்றிய குறிப்புகளான

**'பொன்தேர் ஆயிரைப்புதுமலர் மிடைந்த**
**பன்னூல் மாலைப் பனைபடு கலிமாப்'**

எனும் பாடல் வரிகள் மூலம் அறியமுடிகிறது. இவ்வாறு ஆவாரை பழந்தமிழர் வாழ்வியலில் முக்கியப் பங்கு வகிப்பதை அறியமுடிகிறது.

**2. ஆவாரை செடியின் தாவரவியல் பண்புகள் மற்றும் பருவ நிலை**

ஆவாரை ஒரு வறண்ட நிலங்களில் வளரும் மூலிகை வகை. இது மஞ்சள் நிறப்பூக்கள் கொண்டது. இதன் இலைகள் இருகரத்திலும் ஒழுங்காக இருக்கும். மண் மற்றும் காலநிலையைத் தாங்கும் திறன் மிகுந்தது. அதிக வெப்பநிலை மற்றும் குறைந்த ஈரப்பதம் உள்ள பகுதிகளிலும் வளர்கிறது. பசுமையான இலைகள், நீண்ட வேர்கள், மற்றும் சிறிய கிழங்குகள் காணப்படுகின்றன. இதன் பூக்கும் பருவம் பொதுவாக வருகால மழைக்குப் பிறகு தொடங்கி, மண் ஈரமடைந்த காலங்களில் அதிகமாக மலர்கிறது. இதன் விதைகள் பருவம் மாறும் சூழலில் பூண்டாகி பரவுகின்றன. இதன் மரபியல் வகை செனோபியா குடும்பத்தில் அடங்கும். இவ்விதமான தாவரவியல் பண்புகள் ஆவாரையின் மருத்துவ குணங்களை நிரூபிக்கும் அடிப்படையாகும். பூக்கும் பருவம் அதிகம் காணப்படும் பகுதிகளில், மக்கள் இதனை எடுத்துக் கொண்டு வைத்திய முறைகளில் பயன்படுத்தி வந்தனர் என்பதை அறியமுடிகிறது.

ஆவாரை பற்றிய ஆய்வுகள் பெரும்பாலும் தாவரவியல், மருத்துவக் குணங்கள் மற்றும் சித்த மருத்துவத்தில் அதன் பயன்பாடுகளுக்கு உட்படுத்தப்பட்டுள்ளன. இன்றுவரை தமிழர் வாழ்வியல், கலாச்சாரம், சமூக மரபுகள் ஆகிய பரிமாணங்களில் ஆவாரையின் பங்கு குறித்து விரிவான தேடல்கள் உருவாகியுள்ளன. தமிழர்களின் கிராமிய சமுதாயங்களில் ஆவாரை மூலிகை எவ்வாறு அன்றாட வாழ்க்கையில் சடங்குகளில், மரபுவழி வைத்திய முறைகளில் பயன்படுத்தப்பட்டு வந்துள்ளது. இது மட்டும் அல்லாமல், பெண்களின் மருத்துவ அறிவு, குழந்தை பராமரிப்பு, சுற்றுச்சூழல் பராமரிப்பு போன்ற சமூக செயல்பாடுகளில் ஆவாரையின் பங்கு மற்றும் தாக்கம் பற்றிய ஆய்வுகள் மேற்கொள்ளப்படுகின்றன.

இந்த ஆய்வு, நேரடி, பாரம்பரிய நிபுணர்களுடன் உரையாடல், குடும்ப மரபுகளின் ஆய்வு மற்றும் நூல்களிலிருந்து தொகுத்த தரவுகளை அடிப்படையாகக் கொண்டு அமைக்கப்பட்டது. இதன் மூலம், ஆவாரை மூலிகை தமிழர் வாழ்வியல் மரபின் ஒரு மையப் பொருளாக இருப்பதை தெளிவாக வெளிப்படுத்துகிறது. மேலும், இத்தகைய ஆய்வுகள் பாரம்பரிய அறிவை பாதுகாக்கவும், நவீன சமூகத்தில் அதனை புதுப்பிக்கவும் உதவும். இது கிராமிய சமூகங்களின் வாழ்வியல், மருத்துவம் மற்றும் சூழல் சார்ந்த பழக்க வழக்கங்களைப் பற்றி அறிந்து, அதனை அன்றாட வாழ்வில் மீண்டும் பயன்படுத்தும் வாய்ப்புகளை உருவாக்கும். தற்போது, பல தாவரவியல் மற்றும் மருத்துவ ஆராய்ச்சிகள் ஆவாரையின்

வேதியியல் கூறுகளின் மருந்துத்தன்மைகளை விவரிக்கும் நிலையில் இருப்பினும், அதன் சமூக மற்றும் பண்பாட்டு பங்களிப்பு குறித்த ஆய்வுகள் இன்னும் அவசியமாக உள்ளன.



**Fig2: ஆவாரையின் பல்துறைப் பயன்களைக் காட்டுகிறது**

இந்த படம் **மூலிகைச் செடியான ஆவாரையின்** (Aavaram - Senna auriculata) பல்துறைப் பயன்களைக் காட்டுகிறது. இது பாரம்பரிய நடனங்கள், விவசாயம், ஆயுர்வேத மருந்து தயாரிப்பு, ஆன்மீக வழிபாடு, பண்டைய இலக்கியங்கள், மற்றும் மருத்துவப் பயன்கள் எனப் பல்வேறு அம்சங்களில் ஆவாரையின் முக்கியத்துவத்தையும், சமூகப் பங்களிப்பையும் சுற்றியுள்ள படங்களின் மூலம் விளக்குகிறது.

### 3. தமிழர் சித்த மருத்துவத்தில் ஆவாரையின் பங்கு

தமிழர் வாழ்வியலின் ஆதார வடிவங்களில் ஒன்றாகக் கருதப்படும் செடிவகைகள், பண்பாடு, மருத்துவம், உணவு, சூழல் ஆகிய பல துறைகளுடன் இயற்கையாக இணைந்துள்ளன. அவற்றுள் ஆவாரைச் செடி குறிப்பிடத்தக்க இடத்தைப் பெறுகிறது. கிராமப்புற வழக்காற்றில் முதல் தேவையான மருந்தாகவும், தெய்வ நம்பிக்கைகளின் சின்னமாகவும், பெண்மையின் ஸ்திரத்தன்மையை குறிக்கும் அடையாளமாகவும் ஆவாரைத் திகழ்கிறது. இலக்கண நூல்களிலும், மருத்துவக் குறிப்புகளிலும், மக்கள் பாடல் மரபுகளிலும் ஆவாரையின் காட்சிப்படிமம் தெளிவாகப் பதிவாகியுள்ளது.

ஆவாரைச் செடியின் ஒவ்வொரு பகுதியும் இலை, பூ, பல், பட்டை, வேர், விதை ஒன்றிற்கொன்று மாறுபட்ட பயன்பாடுகளை வழங்குகின்றன. மக்கள் வாழ்வியலில் இது மருத்துவப் பயன்களுக்கு மட்டுமின்றி, உடல்-மனம் சமநிலையை காத்து, சமூக வழிபாட்டின் அடையாளச் சின்னமாகவும் செயல்படுகிறது. குறிப்பாக, பெண்கள் ஆரோக்கியத்தில் ஆவாரைப் பூ-இலைகள் பாரம்பரியமாக பயன்படுத்தப்பட்டமை, காய்ச்சல், கண் சிவப்பு, இரத்த வெப்பம் குறைப்பு, இரத்தம் சுத்திகரிப்பு, தாகம் குறைப்பு, மூட்டுவலி, உடல்வலி குறைவு, உடல் எடை குறைப்பு, புண் ஆற்றுதல், குழந்தைகளின் மார்புக் குழாய்க் குறைபாடுகள், தோல் நோய்கள், ஜீரணத் பிரச்சனைகள் ஆகியவற்றில் பயன்படுத்தப்பட்ட அனுபவங்கள், மருத்துவ ஆய்வுகளுடனும் இணைந்துக் காணப்படும் ஒரு வலுவான பன்முகப் பார்வையைக் காட்டுகின்றன. இதனுடன், தற்போதைய காலத்தில் ஆவாரையின் ஆரோக்கியப் பயன்கள் விஞ்ஞான ரீதியாக ஆராயப்படத் தொடங்கியுள்ளன. இதன் மலர் கஷாயம், வேரின் சாறு, இலைத் தேநீர் ஆகியவை நவீன ஆய்வுகளிலும் நோய் எதிர்ப்பு மற்றும் மாற்றுச் சீர்க்கை மேம்பாட்டில் சிறந்த தாக்கம் வழங்குவதாகக் கண்டறியப்பட்டுள்ளது.

எனவே, ஆவாரை என்பது ஒரு சாதாரண காட்டு மூலிகை அல்ல| தமிழர் வாழ்வியலில் ஆழமாக வேரூன்றிய ஒரு பண்பாட்டு மருத்துவ சூழியல் அடையாளச் செடி ஆகும். இந்த ஆய்வு, ஆவாரையின் பன்முகப் பங்களிப்புகளை மரபு அறிவு, வாழ்வியல் அனுபவங்கள் மற்றும் தற்போதைய ஆய்வுகளுடன் இணைத்து முழுமையான பார்வையில் முன்வைக்கிறது.

தமிழ் சித்த மருத்துவத்தில் ஆவாரை தனித்துவமான மூலிகையாக கருதப்படுகிறது. இதன் “கசப்பு - துவர்ப்பு” சுவைகள் உடலை சுத்திகரித்து, உள்வெப்பத்தை குறைக்கும் என நம்பப்படுகிறது. முதன்மையாக சிறுநீரக நோய்கள், இரத்த சுத்திகரிப்பு, தோல் வியாதிகள், ஜீரணக்குறைபாடுகள் நீரிழிவு குறைப்பு மற்றும் உடல் வலியை இலை மற்றும் பூக்கள் மூலம் சரி செய்தனர். பழங்கால சித்த மருந்தாசிரியர்கள் ஆவாரை இலைகளை வேகவைத்து கஷாயமாக செய்து வழங்கினர். குழந்தைகளுக்கும், வயதானவர்களுக்கும் பாதுகாப்பான மூலிகை எனும் பாரம்பரிய நம்பிக்கை இதற்கு உள்ளது. கிராமப்புறங்களில் பெண்கள் இம்மருந்தை தினசரி குடிப்பது வழக்கமாக இருந்தது.

### 4. வீட்டு வைத்தியத்தில் ஆவாரையின் பயன்பாடு மற்றும் செயல்முறை

பாரம்பரிய முறையில் ஆவாரையின் பயன்பாடு பலவகையாக இருந்துள்ளன. சிறுநீரகச் சிக்கல் மற்றும் உடல் சூடு அதிகரித்தபோது ஆவாரை இலைகளை சுடு நீரில் இட்டு குடித்து உடலை

குளிர்ச்சியடைய செய்தனர். தோல் எரிச்சல் மற்றும் கண் எரிச்சல் போன்ற பிரச்சினைகளுக்கு பிசைந்து பூசினர். கிள்ளைகளுக்கு உடல் பருமன் செய்யும் நோக்கத்துடன் ஆவாரை சாறு நீரில் கலந்து குளிப்பதில் பயன்படுத்தப்பட்டுள்ளன. இது குழந்தைகளின் நரம்பு மற்றும் தோல் ஆரோக்கியத்துக்கு நன்மை தரக்கூடடியதாக கருதப்படுகிறது. இதில் பயன்படுத்திய செயல்முறைகள், எளிய முறையில் மருந்துக் காய்ச்சல்களை குறைப்பதற்கான நுட்பங்களாக இருந்துள்ளன. இது குடும்பம் முழுவதும் பரம்பரையாக பரிமாறிக் கொண்டு வந்த ஒரு பாரம்பரிய மருத்துவ முறையாக அறியமுடிகிறது.

**5. பெண்களின் மருத்துவ அறிவு மற்றும் ஆவாரை**

தமிழக கிராமங்களில், பெண்கள் மருத்துவ அறிவுக்கு முக்கிய இடம் பெற்றவர்கள். குழந்தை பராமரிப்பு முதல், உடல் நலம் பராமரிப்பிற்கு ஆவாரை பயன்படுத்துவதில் பெரும் பங்கு வகிக்கின்றனர். மாதசுழற்சி சிக்கல்களில், உடல் சூடு அதிகரிக்கும் சமயங்களில், ஆவாரை நீரை குடிப்பது வழக்கமாக இருந்துள்ளது. பாரம்பரிய அறிவாளர்கள் பெண்களின் அனுபவங்களை பெரிதும் மதித்து, சமூகத்தில் அவற்றை பரிமாறியுள்ளனர். பெண்கள் ஆவாரையைத் தங்கள் வீட்டுத் தாவரமாக வளர்த்து, அவசியமான நேரங்களில் மருத்துவ மூலிகையாகப் பயன்படுத்தியுள்ளனர். இது பெண்களின் மருத்துவ அறிவின் முக்கிய தளம் ஆகும்.

**6. குழந்தைகள் பராமரிப்பில் ஆவாரையின் பங்கு மற்றும் நம்பிக்கை**

குழந்தைகள் பராமரிப்பில் தோல் ஆரோக்கியத்துக்கு ஆவாரை இலைகளை நனைத்து குளிப்பது வழக்கமாக பின்பற்றியுள்ளனர். இது தோல் உலர்ச்சி, காய்ச்சி மற்றும் கிருமிபரவல் தடுக்கும் நன்மையை வழங்கியுள்ளன. மேலும், குழந்தைகளுக்கு ஜீரணக் குறைபாடு இருப்பின் ஆவாரை கஷாயம் குடித்தல் பரிந்துரைக்கப்பட்டுள்ளது. நரம்பு தளர்வு மற்றும் உடல் வலியை குறைக்கும் விதமாக இது பெருமளவு பயன்படுத்தப்பட்டுள்ளது. இத்தகைய முறைகள் கிராமிய சமூகத்தில் வெவ்வேறு பகுதிகளில் இருந்து பரவியுள்ளது வெளிப்படுகிறது.

**7. கோயில் வழிபாட்டிலும் ஆவாரையின் முக்கியத்துவம்**

நாட்டுப்புற கோயில்களில் வழிபாட்டு முறைகளில் ஆவாரை இலைகள் மற்றும் பூக்கள் முக்கிய இடம் பெற்றுள்ளன. தீய சக்திகள் அகற்றப்படும் போது, ஆவாரை பூ மற்றும் இலைகள் பயன்படுத்தப்படுவது வழக்கமாகும். இது ஆன்மீக சுத்திகரிப்பு என்றும் கருதப்படுகிறது. பிரதானமாக,

கோயில் சுத்திகரிப்பு பூஜைகளில் ஆவாரை மருந்து மற்றும் பூக்கள் சேர்த்து பூஜை நடத்தப்படுகின்றன. இது பகைவர்களை வெல்லும், தீய சக்திகளை அகற்றும் நம்பிக்கையின் அடிப்படையில் சமூகத்தில் பரவி உள்ளதை அறியமுடிகிறது.

**8. கிராமிய விழாக்கள் மற்றும் பண்பாட்டு நிகழ்வுகளில் ஆவாரை**

தமிழக கிராமங்களில் தைப்பொங்கல் திருநாள், திருமணங்கள், பிறந்த நாள் விழாக்கள், திருவிழாக்கள் போன்ற பண்பாட்டு நிகழ்வுகளில் ஆவாரை உபயோகப்படுத்தப்படும் பழக்கம் இன்றளவும் பயன்பாட்டில் உள்ளன. இதன் மூலம் நல்ல எண்ணங்கள் மற்றும் ஆரோக்கிய வாழ்வு வாழ்வதற்கான அடையாளமாக உள்ளது. மேலும் வீட்டிற்கு புதிய அந்நிய நபர்கள் வந்தால், ஆவாரை செடியை பூட்டி, வீட்டுக்குள் தீமைகள் நுழையாமல் தடுக்கும் முறையாகவும் கருதப்படுகிறது. இந்த பண்பாட்டு நடைமுறைகள் கிராமிய சமூகத்தின் ஆன்மீக அடிப்படையைக் காட்டுகின்றன.

**9. சுற்றுச்சூழல் மற்றும் விவசாயத்தில் ஆவாரையின் பங்கு**

வறண்ட நிலங்களின் ஈரப்பதம் குறைவாக இருக்கும் போது, ஆவாரை செடியை வளர்த்து நிலத்தின் ஈரத்தை மேம்படுத்தியுள்ளனர். இதன் நீண்ட வேர்கள் மண்ணின் அடிக்கல்களை உறுதிப்படுத்தி மண் களிமண் ஆகாமல் தடுப்பதாகவும் கருதப்படுகிறது. பயிர் சுழற்சி முறையில், இடைநிலையாக ஆவாரை வளர்ப்பது நிலத்தின் சத்துக்களை சமநிலைப்படுத்த உதவியது. இது வேளாண்மையில் நிலத்தை சீரமைக்கும் பண்டிகை வகை மருந்து செடியாகும் பயன்படுத்தப்பட்டுள்ளமையை அறியமுடிகிறது.

**Fig3: அகத்தி  மரத்தின் பன்முகப் பயன்களை விளக்குகிறது**

Fig3 இந்த படம் **அகத்தி** (Sesbania grandiflora) மரத்தின் பன்முகப் பயன்களை விளக்குகிறது. இது பாரம்பரிய நாட்டியம், பண்டைய இலக்கியங்கள், விவசாய நடைமுறைகள், மருத்துவத் தயாரிப்புகள், ஆன்மீக வழிபாடு, மற்றும் நவீன தொழில்நுட்பப் பயன்பாடு எனப் பல்வேறு துறைகளில் அகத்தி மரத்தின் முக்கியத்துவத்தையும், சமூகப் பங்களிப்பையும் சுற்றியுள்ள படங்களின் மூலம் விளக்குகிறது.

**10. தமிழர் பண்பாட்டில் ஆவாரையின் சித்தாந்தம்**

தமிழர்களின் பண்பாட்டில், ஒவ்வொரு மூலிகைக்கும் ஒரு சித்தாந்தமாக உள்ளது. ஆவாரை "தீய சக்திகளை அகற்றும், நன்மைகளை அழைக்கும்" செடியாக கருதப்படுகிறது. அதன் மஞ்சள் நிற பூக்கள்

செழிப்பையும் ஆரோக்கியத்தையும் குறிக்கும் அடையாளமாக கருதப்படுகிறது. இதனால், ஆவாரை மருந்தாக மட்டுமின்றி, சிந்தனைகளிலும் ஆன்மீக வாழ்வியலிலும் இடம் பெற்றுள்ளது வெளிப்படுகிறது.

இன்றைய மருத்துவ அறிவியல் ஆவாரையின் மருத்துவக் குணங்களை ஆய்வு செய்து வருவதும், மரபு அறிவை பாதுகாப்பதும் அவசியம். நவீன தொழில்நுட்பங்களுடன் இணைந்து பாரம்பரிய மருத்துவ அறிவை சரியாக பதிவு செய்தல் இன்றியமையாதது ஆகும். கிராமிய சமூகத்தில் இருந்து இழப்படையும் மரபு அறிவை மீட்டு, பாரம்பரிய மருத்துவ முறைகளை பரப்புவதன் மூலன் சமூக ஆரோக்கியத்தை மேம்படுத்த முடியும்.




**Fig4: ஆவாரையின் (Aavaram - Senna auriculata) பல்துறைப் பயன்**

இந்த மூன்று படங்களும் **ஆவாரையின்** (Aavaram - Senna auriculata) பல்துறைப் பயன்களையும், சமூக-பண்பாட்டு முக்கியத்துவத்தையும் விளக்குகின்றன. இது பாரம்பரிய மருத்துவம், விவசாயம், அன்றாடப் பயன்பாடுகள், ஆன்மீக வழிபாடு, பண்டைய இலக்கியங்கள் மற்றும் நவீன அறிவியல் ஆராய்ச்சி போன்ற பல்வேறு அம்சங்களில் ஆவாரையின் பங்களிப்பைச் சுற்றியுள்ள படங்களின் மூலம் சித்தரிக்கிறது.

## 11. முடிவுரை :

ஆவாரை செடி தமிழர் வாழ்வியலின் பல்வேறு அம்சங்களில் ஆழமாகக் கலந்துகொண்டுள்ள ஒரு முக்கிய மூலிகை ஆகும். ஆவாரை மருந்தாக மட்டும் அல்லாமல், குடும்ப வைத்திய முறைகள், பெண்களின் மருத்துவ அறிவு, குழந்தை பராமரிப்பு, சமூக நம்பிக்கைகள், கோயில் வழிபாடு மற்றும் சுற்றுச்சூழல் பராமரிப்பு போன்ற பரிமாணங்களில் பன்முகப்பங்காற்றியுள்ளது. இந்த ஆய்வு, ஆவாரையின் மரபு அறிவு மற்றும் அதன் சமூக-பண்பாட்டு அடிப்படையை நவீனமாக விளக்குவதுடன், இன்றைய சமூகத்தில் இத்தகைய பாரம்பரிய அறிவை மீண்டும் மதிப்பீடு செய்து பராமரிப்பதன் அவசியத்தையும் வலியுறுத்துகிறது. பாரம்பரிய அறிவு இழப்பின் போது, இத்தகைய மூலிகைகள் குறித்த அறிவும் மறைந்து விடும் அபாயம் உள்ளது. எனவே, ஆவாரையை போன்ற மூலிகைகள் குறித்த பாரம்பரிய அறிவை சேகரித்து, ஆய்வு செய்து பாதுகாப்பது தமிழர் வாழ்வியல் மரபின் முக்கிய பங்கு ஆகும். இந்த ஆய்வு தமிழர் கிராமிய சமுதாயங்களின் மருத்துவ மற்றும் கலாச்சார பண்புகளைக் காக்கும் திறனுடன், மருத்துவத்தில் புதிய வாய்ப்புகளையும் திறக்கும் என்பது வெளிப்படுகிறது.

## 12. மேற்கோள்கள் :


1. அகத்தியர். (2002). அகத்தியர் வைத்திய சிந்தாமணி. சென்னை: தமிழ்நாடு சித்த மருத்துவ பல்கலைக்கழகம்.
2. அரிவழகன், மு. (2016). தமிழர் சுற்றுப்புற அறிவியல். மதுரை: போதி பதிப்பகம்.
3. இராசரத்தினம், நா. (1998). தமிழர் வழக்கிலுள்ள மூலிகைகள். சென்னை: மணிவாசகர் பதிப்பகம்.
4. இராமச்சந்திரன்,ச. (2012). சங்க இலக்கியமும் தாவர வழக்கங்களும். சென்னை: நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்.
5. பரமேஸ்வரி, க. (2017). கிராமியத் தாவரங்கள் மற்றும் பெண்களின் வாழ்வியல் பங்களிப்புகள். திருச்சி: பாரி பப்ளிகேஷன்ஸ்.
6. பலசுந்தரம், பொன். (2001). தாவரவியல் – மலர்ந்த மூலிகைகள். சென்னை: மாணவர்நிலையம்.
7. வல்லியப்பன், எஸ். (2009). தமிழர் சுற்றுச்சூழல் அறிவு. நாகர்கோவில்: தீபம் பதிப்பகம்.
8. சண்முகம், இரா.(2015). சித்த மருத்துவ மூலிகைச் சிகிச்சை. மதுரை : தமிழ் மருத்துவ கல்வி நிறுவனம்.

9. சண்முகநாதன், அ. (2012). தமிழர் மரபுவழி மருத்துவம். சென்னை: பன்னாட்டு தமிழ் ஆராய்ச்சி நிறுவனம்.

10. சுப்பிரமணி,எஸ்.(2005). தமிழக கிராமிய பண்பாடு. சேன்னை: கிழக்கு பதிப்பகம்.

11. செல்வகுமார், பி..(2014). குழந்தை மருத்துவம் - மரபு மற்றும் நவீனம். சென்னை : தமிழ் மருத்துவ நிறுவனம்.

12. தமிழ்ப் பல்கலைக்கழகம். (1999). தமிழ்நாடு மூலிகை களஞ்சியம். தஞ்சாவூர்: தமிழ்ப் பல்கலைக்கழக வெளியீடு.

13. மதுரை நாகசுவாமி, (1998). தமிழர் வழிபாடு மரபுகள். சென்னை: உலகத்தமிழ் ஆராய்ச்சி நிறுவனம்.

14. முருகன்,கு. (2017). மரபு மூலிகை தாவரவியல் ஆய்வு. சென்னை: தமிழ் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்.

15. தெய்வநாயகன், இரா.(2004). சங்க இலக்கிய சூழல். சென்னை: உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனம்.

16. பழநி, த.(2018). தமிழக மக்கள் வைத்தியம். திருச்சி : திருவள்ளுவர் பதிப்பகம்.

17. லட்சுமி, எம். (2020). தமிழர் பெண்களின் மரபு மருத்துவ அறிவு. சென்னை : கலைஞர் பதிப்பகம்.

Tamilmanam